**20.01.2026** **<u>அசல் வழக்கு எண். 11/2017</u>** **Starting Time : 12.18 p.m.**

**<u>வா.சா.2</u>** **திரு.முனுசாமி த/பெ.சின்னசாமி.**

**<u>சாட்சி சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டு, 1,6 மற்றும் 7ம் பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை.</u>**

**1**). என் பாட்டனார் பெயர் முருக கவுண்டர் என்றால் சரிதான். அவருக்கு சின்னசாமி, தங்கவேல், பெரியசாமி ஆகிய மூன்று மகன்கள் இருந்தார்கள் என்றால் சரிதான். நான் சின்னசாமியின் மகன் என்றால் சரிதான். என்னுடன் சேர்த்து ஐந்து பேர் சின்னசாமிக்கு வாரிசுகள் ஆவோம். எனது அண்ணன் பூங்காவனம் இறந்துவிட்டார் என்றால் சரிதான். இந்த வழக்கை தாக்கல் செய்த வாதி சாமிநாதன் எனது தம்பி என்றால் சரிதான்.

**2**). எனது பாட்டனாருக்கு பாத்யப்பட்டிருந்த சொத்துக்களை அவரின் மூன்று மகன்கள் பிரித்துக் கொண்டார்களா என்றால் பிரித்துக் கொண்டார்கள். எனது தகப்பனார் பெயரில் சில சொத்துக்கள் வாங்கப்பட்டதா என்றால் வாங்கப்பட்டது. எப்போது வாங்கினார் என்றால் பாகம் பிரித்த பிறகு வாங்கினார். எந்த வருடம் சொத்துக்கள் வாங்கினார் என்றால் 1947ல் வாங்கினார். இந்த வழக்கை தாக்கல் செய்த வாதி தாவா சொத்துக்களில் எதன் அடிப்படையில் உரிமை கொண்டாடுகிறார் என்ற விவரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியும், எனது தகப்பனாருக்கு பாத்யப்பட்ட சொத்துக்கள் என்ற வகையில் உரிமை கொண்டாடுகிறார்.

**3**). என் தகப்பனார் அவரது சொத்துக்களை பொறுத்து ஆவணம் ஏதும் எழுதி வைத்தாரா என்றால் இல்லை. என் தகப்பனாரின் சொத்தில் எங்கள் ஐந்து பேருக்கும் உரிமை உண்டு என்றால் சரிதான். தாவா சொத்துக்களை தவிர என் தகப்பனார் வேறு சொத்துக்களை எங்களுக்கு கொடுத்தாரா என்றால் எனக்கும் என் அண்ணனுக்கும் கொடுத்தார். என் தகப்பனார் அவரது சொத்துக்களை வாதியின் பெயருக்கு கிரயம் செய்துக் கொடுத்த விவரம் தெரியுமா என்றால் தெரியாது.

**4**). தாவா சொத்தின் சர்வே எண் தெரியுமா என்றால் தெரியும். சர்வே எண். 16/3 ஆகும். எவ்வளவு விஸ்தீரணத்திற்கு வழக்கு தாக்கல் செய்துள்ளார் என்றால் 42 சென்ட் ஆகும். என் சிறிய தகப்பனார் பெரியசாமிக்கு நிறைய கடன் இருந்ததால் மேற்படி கடனை என் தகப்பனார் தான் செலுத்தினார் என்று வாதி கூறியுள்ள விவரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. என் தகப்பனாருக்கு சர்வே எண்.16/3ல் உட்பிரிவு செய்யப்பட்டு 16/3டில் 33

சென்ட் ஒதுக்கப்பட்டது என்றால் சரியல்ல. என் சித்தப்பா தங்கவேல் என்பவருக்கு சர்வே எண்.16/3சில் 28 சென்ட் ஒதுக்கப்பட்டது என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. எனது மற்றொரு சித்தப்பா பெரியசாமி என்பவருக்கு சர்வே எண்.16/3எ-ல் 35 சென்ட்டும், சர்வே எண்.16/3இ-ல் 43 சென்ட்டும் ஒதுக்கப்பட்டது என்ற விவரம் தெரியுமா என்றால் தெரியாது.

**5**). தங்கவேலுக்கு ஒதுக்கப்பட்ட பாகத்தை அவர் விற்றுவிட்டார் என்ற விவரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. எனது சித்தப்பா பெரியசாமிக்கு ஒதுக்கப்பட்ட இரண்டு அயிட்ட சொத்துக்களில் ஒரு அயிட்ட சொத்தினை குப்பம்மாள் என்பவருக்கு விற்பனை செய்துவிட்டார் என்ற விவரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. என் தகப்பனாருக்கு ஒதுக்கப்பட்ட 33 சென்ட் சொத்துக்களை வாதி சாமிநாதனுக்கு விற்பனை செய்துவிட்டார் என்ற விவரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது, என் தகப்பனாருக்கு உரிமையான சொத்து என்பதால் வாதி இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளார்.

**6**). எனது சிறிய தகப்பனார் பெரியசாமிக்கு ஒதுக்கப்பட்ட சொத்துக்களை தான் பிரதிவாதி இராமமூர்த்தி என்பவருக்கு விற்பனை செய்துவிட்டார் என்றால் சரியல்ல, என் தகப்பனாருக்கு பாத்யப்பட்ட சொத்துக்கள் ஆகும். மேற்படி பிரதிவாதி கிரயம் பெற்ற சொத்துக்களை அவரது பேரன் பெயருக்கு செட்டில்மெண்ட் ஆவணம் எழுதி வைத்து விட்டார் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. மேற்படி பிரதிவாதியின் பேரனுக்கு எழுதி வைக்கப்பட்ட தாவா சொத்துக்களை மற்றொரு நபருக்கு குத்தகைக்கு விட்டு அதில் பயிர் வைத்து வருகிறார்கள் என்றால் யார் பயிர் செய்து வருகிறார்கள் என்று எனக்கு தெரியாது.

**7**). வாதி என்ன வேலை செய்து வந்தார் என்றால் போலீஸ் வேலை பார்த்து வந்தார். அதனால் அவர் வேறு வேறு இடங்களில் வேலை செய்து வந்தார் என்றால் சரிதான். வாதி வேறு வேறு இடங்களில் வேலை செய்து வந்ததால் தாவா சொத்துக்களை அனுபவிக்கவில்லை என்றால் சரிதான். வாதி பணி ஓய்வு பெற்றபிறகு தான் தாவா சொத்துக்களை பொறுத்து வழக்கு தாக்கல் செய்துள்ளார் என்றால் சரிதான். தற்போது தாவா சொத்துக்களில் யார் பயிர் வைக்கிறார்கள் என்றால் எனக்கு தெரியாது. தாவா சொத்துக்கள் எனது சித்தப்பாவின் சொத்து என்றும், அதை பிரதிவாதிக்கு விற்பனை செய்துவிட்டார் என்றால் சரியல்ல, தாவா சொத்துக்கள் எனது தகப்பனாரின் சொத்து ஆகும், அது எனது தம்பிக்கு உரிமையானது ஆகும்.

8). பிரதிவாதிக்கு விற்பனை செய்துவிட்ட பிறகு பிரதிவாதி தாவா சொத்துக்களை அனுபவிக்கக்கூடாது என்பதற்காக பிரதிவாதி மீது வாதி பொய்யாக வழக்கு தாக்கல் செய்துள்ளார் என்றும், வாதி எனது சகோதரர் என்பதால் அவருக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல, ரெக்கார்டு அடிப்படையில் தாவா சொத்துக்கள் என் தம்பிக்கு பாத்யப்பட்டதாகும்.

**மறுவிசாரணை - இல்லை.**

**Ending time : 12.49 p.m.**

Taken down by me in Open court read over to the witness in the presence of the Plaintiff/Defendant and admitted by him/her to be correct.

Sd/-C. Mahalakshmi,
District Munsif,
Vandavasi.